சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 10/2021

பெயர் திரு. ஆறுமுகம் நாள்.02.03.2026
த/பெ. வரதப்பன்

<u>பிரதிவாதி சாட்சி 3 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கை தவளகிரி மீது பாலகிருஷ்ணனின் வாரிசுகள் தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்கு புல எண்.287/21B ற்க்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் முழு விஸ்திரனம் 2 ஏக்கர் 40 சென்ட் என்றால் சரிதான். வழக்கு சொத்து எல்லப்பனுக்கு உரிமையானது என்றால் சரிதான். எல்லப்பனுக்கு பாலகிருஷ்ணன், ராமதாஸ், ஏழுமலை மற்றும் சுப்பிரமணி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். எல்லப்பன் 1980 வருட காலத்தில் இறந்து போனார் என்றால் சரிதான். எல்லப்பன் இறந்த உடன் அவரது வாரிசுகள் வழக்கு சொத்து உட்பட இதர சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டனர் என்றால் சரிதான். அதில் வழக்கு சொத்து பாலகிருஷ்ணன் பாகத்திற்கு வைக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. பாலகிருஷ்ணன் 1ம் பிரதிவாதிக்கு வழக்கு புல எண்ணில் 69 சென்ட் கிரையம் கொடுத்தார் என்றால் ஒரு ஏக்கர் ஐம்பது சென்ட் கிரையம் கொடுத்தார். அந்த கிரையத்திற்கு நான் 1ம் பிரதிவாதி உடன் சார் பதிவு அலுவலகத்திற்கு சென்றேன். அந்த கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை.

பாலகிருஷ்ணன் 1ம் பிரதிவாதிக்கு 69 சென்ட் தான் கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. வழக்கு புல எண்ணில் 1ம் பிரதிவாதி பாலகிருஷ்ணனிடம் மட்டும் தான் கிரையம் பெற்றுள்ளார். குப்புசாமி, பொன்னன் மற்றும் ஏகாம்பரம் ஆகியோருக்கு வழக்கு சொத்தில் உரிமை இல்லை என்று சொன்னால் சரிதான்.

3. குப்புசாமி, பொன்னன் மற்றும் ஏகாம்பரம் ஆகியோரிடம் 1ம் பிரதிவாதி சொத்துக்களை கிரையம் பெற்றதாக கட்சி செய்கிறார் என்றால் சரிதான். எனவே, குப்புசாமி, பொன்னன் மற்றும் ஏகாம்பரம் ஆகியோரிடம் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றதாக கூறிவது தவறு என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை அனுபவம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் பட்டா இதுவரை எல்லப்பன் பெயரில் உள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி எனக்கு உறவினர் இல்லை. அவர் கூறியதன் பெயரில் சாட்சி அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்களை வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**